# பார்வதி

அன்று பகல் காரியங்களெல்லாம் முடிந்ததும் கூடத்தில் வந்து சிறிது உட்கார்ந்தேன், தமிழ்ப் பத்திரிகையை எடுத்துக்கொண்டு.

"மாமி, உங்களை அம்மா கையோடு கூட்டி வர சொன்னாள்," என்று கூறிய வண்ணம், எதிரில் வந்து நின்றாள், சிறுமி மீனா. நான் பத்திரிகையை அப்படியே போட்டுவிட்டு, அந்தப் பெண்ணுடனேயே கிளம்பினேன், நாலு வீடு தள்ளியிருக்கும் அவர்கள் அகத்திற்கு.

மீனாவின் தாய் ராஜம்மாள், வாசற்படியிலிருந்தவாறே, கவலை தோய்ந்த குரலில் என்னை வரவேற்றாள். "வாருங்கள் மாமி; எனக்கு மூளையே குழம்பிக் கிடக்கு. உங்களைத்தான் யோசனை கேட்கத் தோணித்து. நல்ல வெயிலில் வரச்சொல்லிச் சிரமப்படுத்துகிறேன். என்ன செய்யட்டும்! வாருங்கள், உள்ளே" என்றாள்.

"என்ன சிரமம் இதில்? தொலையாத தூரம் நடந்துவிட்டேன்! என் யோசனை எதற்கு? அதை முதலில் சொல்லுங்கள்" என்று கூறியவாறே நானும் உள்ளே சென்றேன்.

வீட்டுள் நிச்சப்தம் நிலவியிருந்தது. வழக்கம்போல் என்னை எதிர்கொண்டழைக்க ஓடிவரும் சரஸ்வதியைக் காணாதது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. சரஸ்வதி ராஜம்மாளின் மூத்த பெண். பெண்பாடசாலையில் எட்டாவது வகுப்பு படித்து முடித்துவிட்டு, அங்கே மேலே படிக்க வசதியில்லாததால், வீட்டோடு இருந்து தானே ஆசையுடன் பலவிதப் புத்தகங்களைப் படித்துப் புத்திசாலியாய் விளங்குகிறாள். பதின்மூன்று வயசுப் பெண்ணாகிய அவளுக்கு, அவள் பெற்றோர்கள் அளிக்கும் பயிற்சி மெச்சத்தக்கது. வீட்டுக்கு அவசியமான சட்டை, துணி மணிகளைத் தைப்பாள்; பாட்டும் நன்றாகப் பாடுவாள். அம்மாவிற்கும் வீட்டுக் காரியங்களில் ஒத்தாசையாய் இருப்பாள். வேறு என்ன குறை? "அவளுக்குத் தகுந்த கணவன் அகப்பட வேணுமே!" என்று நான் அடிக்கடி நினைப்பதுண்டு. அவள்மேல் எனக்குப் பிரியம் அதிகம்.

ஆகவே அவள் கண்ணில்படாதது கண்டு, "எங்கே சரஸ்வதியைக் காணோம்?" என்று வினவினேன்.

அதற்கு ராஜம், "இப்போது அவளைப் பற்றித்தான் கவலை ஏற்பட்டுவிட்டது மாமி! என் தர்ம சங்கடமான நிலைமையை உங்களிடம் சொல்லி, யோசனை கேட்கத்தான் உங்களை வரவழைத்தேன்" என்று கூறி மேலும் எல்லாம் விவரமாகச் சொல்லி, தன் மனத்தில் இருந்ததை எல்லாம் என்னிடம் கொட்டிவிட்டு, ஆறுதல் அடைந்தவள்போல் பெருமூச்சுவிட்டாள்.

விஷயம் மங்களகரமான விஷயந்தான். சரஸ்வதி மீது இயற்கையன்னை தன் சக்திகளைப் பொழியத் தொடங்கினாள். நேற்றுவரை பாவாடைச் சட்டை அணிந்து பாலிகையாக இருந்த சரஸ்வதி இன்று முதல் இளம் மங்கையாக மாறுகிறாள்.

மலரைப் பார்த்து மகிழ்வதற்குப் பதில், கவலைப்படுகிறாள் ராஜம். சந்தோஷம் உள்ளூர இருந்தாலும் பயமும் கவலையுமே மேலிட்டிருந்தன அவள் மனத்தில். பட்டண வாசமுமில்லாமல் கிராமாந்தரமுமில்லாமல், இரண்டுங்கெட்டானாயிருந்த இந்தச் சீர்திருத்தமில்லாத ஊரில், தன் நிலைமையை எப்படிச் சமாளிப்பதென்று தெரியாமல்

தத்தளித்தாள். மறைக்கவும் இஷ்டமில்லை; மறைக்காமல் இருக்கவும் தைரியமில்லை. என்ன செய்யலாம் என்று என்னைக் கேட்டாள். என்னிடந்தான் அவள் தனி மரியாதையும் வைத்திருந்தாள்.

ராஜம்மாளுக்கு யோசனை நீடிக்காமல், வெட்டொன்று துண்டு இரண்டாக, நான் என் எண்ணத்தை வெளியிட்டேன். நான் கூறியது யோசனையின் முடிவல்ல.

"இதோ பாருங்கள், ராஜம்! யோசனையே வேண்டாம். நாலுபேர் அறிய வாசலில் செம்மண் கோலமிட்டுவிடுங்கள். மேலே சொல்லவேண்டியதெல்லாமும் செய்துவிடுங்கள். சரஸ்வதியை மணையில் அமர்த்தி" என்றேன்.

"நீங்கள் இவ்வளவு தைரியமாகச் சொல்லிவிட்டீர்விட்டீர்கள், மாமி!' எனக்கு அப்படி செய்ய மனமிருந்தாலும் என்னமோ தயக்கமாயிருக்கிறதே. தைரியம் வராது போலிருக்கே. நீங்கள் கொஞ்சங்கூடத் தயங்கவேயில்லையே," என்று பயந்தாள்.

"நான் தயங்கமாட்டேன்தானம்மா, நீங்களும் பயப்படாதீர்கள். நான் சொன்னதுபோல் செய்துவிடுங்கள். உண்மையை மறைப்பது எப்பொழுதும் ஆபத்து. அப்புறம் என்ன இன்னல்கள் நேருமோ சொல்ல முடியாது. லட்சுமீகரமான வெள்ளிக்கிழமை இன்று. இன்றே பகிரங்கப்படுத்திவிடுங்கள். இருபதாம் நூற்றாண்டில் இதற்கெல்லா_ மாயலாமா? தைரியமாய், நான் சொன்னதுபோல் செய்யுங்கள்" என்றேன்.

"சரி மாமி, எனக்கும் அதுதான் இஷ்டம். மனச்சாட்சிக்கு விரோதமாய், உங்கள் வார்த்தைக்கு ஒதுக்காய், ஒரு காரியமும் செய்யமாட்டேன். நீங்கள் சொன்னபடியே நடத்திவிடுகிறேன். நீங்களும் இந்த மூன்று நாளும் அழைக்கிறபோதெல்லாம் வரவேணும்" என்றாள்.

அன்று அமைதியடைந்த மனத்துடன் அகத்திற்கு வந்து சேர்ந்தேன். அடுத்த மூன்று நாட்களும், ராஜம்மாள் வீட்டில் கலகலப்பு, சந்தடி. நான்காம் நாள் கழித்து, ராஜம்மாளே என்னை பார்க்க வந்தாள். அன்று கலங்கியிருந்த முகம் இன்று தெளிந்திருந்தது.

"மாமி, நீங்கள் அவ்வளவு தைரியம் சொல்லியிராவிட்டால் நான் துணிந்திருக்கவே மாட்டேன், இப்படியெல்லாம் நடத்த, எனக்கு இப்போது எவ்வளவு நிம்மதியாய், திருப்தியாய் இருக்கு தெரியுமா? ஆமாம்; கேட்க வேணுமென்று நினைக்கிறதைக் கேட்டுவிடுகிறேன். மாமி, நீங்கள் என்ன அவ்வளவு தயக்கமில்லாமல் சொல்லிவிட்டீர்கள் அன்று? ஏன் தற்காலம் போக்காயிருக்கிறது உங்கள் மனசு?" என்று ஆச்சரியத்தைத் தெரிவித்தாள்.

"ஆமம்மா, இதுமாதிரி சமயத்தில் ஒரு தடவை நான் செய்த தவறு, எனக்குப் புத்தி புகட்டியது. நான் செய்த தவறு ஒரு பாவமும் அறியாத தாயில்லாக் குழந்தை, என் கடைசித் தங்கை, படாத கஷ்டம்பட்டாள். அப்போது முதல் இந்தப் புத்தி வந்தது."

"என்ன, பார்வதியையா சொல்கிறீர்கள்? ஆறு மாதத்திற்கு முன் அகத்துக்காரரோடு வந்திருந்தாளே, அவளா கஷ்டப்பட்டாள்?"

"ஆமாம்; அந்தப் பார்வதியேதான் கஷ்டப்பட்டாள். அவள் புருஷனோடு வாழ்ந்து சந்தோஷமாய் இருக்கப்போகிறாளா என்று ஏங்கிப்போய்விட்டோம் இரண்டரை வருஷ காலம். அவள் அகத்துக்காரர் அவளை இரண்டரை வருஷம் கூட்டிக்கொள்ளாமல் இருந்தார்."

"அப்படியா? நான் பார்த்தபோது, 'என்ன ஒற்றுமையான தம்பதிகள்!" என்று கூறும்படியாக அல்லவா இருந்தார்கள் இருவரும்? அவளையும் அவள் அகத்துக்காரரையும் நினைத்துப் பார்த்தால், அப்படி நடந்திருக்குமென்று நம்ப முடியவில்லையே!"

"நம்ப முடியாதுதான் அம்மா! இப்போது அவர்கள் சந்தோஷமாக இருப்பதால்தான், எங்களுக்கே நாங்கள்பட்ட கஷ்டமும் அநுபவித்த மனவேதனையும் கனவுபோல இருக்கின்றன. என்னவோ ஆண்டவன் அருள்தான், கஷ்டங்களுக்கு விடிவு ஏற்பட்டது."

"என்ன காரணத்தால் அப்படியெல்லாம் நடந்தது மாமி? என்னவோ நீங்கள் செய்த தவறு என்றீர்களே?" என்று கேட்டாள் ராஜம். அவள் ஆவலையும் என் ஆவலையும் பூர்த்தி செய்யும்பொருட்டு, நானும் எல்லாவற்றையும் விவரமாகக் கூற முற்பட்டேன்:

நாங்கள் இங்கே வருவதற்கு முன்பு திருச்சி ஜில்லாவில் ஆறு வருஷம் இருந்தோமே; அந்த ஆறு வருஷத்திற்குள்தான், பார்வதி எங்களிடம் வந்தது முதல் நல்லபடியாய்ப் புக்ககத்திற்குப் போனது, இருந்தது எல்லாம் நடந்தது. அவளுக்குப் பத்து வயசு ஆவதற்குள் தாயார் தகப்பனார் இல்லாத குழந்தையாகிவிட்டாள். அவளை நாங்கள் வளர்க்க ஆரம்பித்தோம்.

இப்போது சரஸ்வதி அடைந்திருக்கும் பருவத்தை அவள் எய்தினாள். ஆனால் இப்போது உங்களுக்குப் புத்தி கூறிய நான், அப்போது செய்தது முற்றும் மாறானது. பிறத்தியாருக்கு உண்மை சிறிதும் தெரியாமல் மறைத்தேன்.

அவள் சிறுபிராயம் முதலே சிறிது வளர்த்தி அதிகம். வயசும் பதின்மூன்று முடியவில்லை. முகத்தில் பால் வடியும். அதனால், உடம்பு தாட்டியாயிருந்ததனால் புடைவை கட்டச்சொல்லிவிட்டேன் என்று சொல்லிக்கொண்டிருந்தேன். நான் சொன்ன விதத்தில் யாருக்கும் சந்தேகம் எழவில்லை. நம்பத்தான் நம்பினார்கள்.

ஆனால் அப்போது அவள் நன்மைக்காகச் செய்வதாகவே மனசார நினைத்துச் செய்தேன்! தாயில்லாப் பெண்; மனசு சிறிதும் நோகலாகாது என்றல்லவா செய்தேன்? அவள் சுகம், அவளைப் பற்றிய பொறுப்பு எல்லாம் எனக்குத்தானே? கல்யாணம் ஆகவில்லை என்று பிறர் சொல்ல ஆரம்பித்துவிட்டால், அவள் மனசு நோகுமோ என்று பயந்தும் பிறர் ஏச்சுக்கும் வார்த்தைக்கும் இடங்கொடுக்க வேண்டாம் என்றுந்தானே அவ்வாறு செய்தேன்!

ஆனால் நான் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்திருந்தது இந்த விஷயத்தில் என்பதை நான் முன்கூட்டி அறிந்தவளா? இல்லையே! ஆனால் நடந்ததெல்லாம் நான் நினைத்ததற்கு நேர் மாறுதான்.

அவளுடைய பதினாலாவது வயசின் இறுதியிலேயே ஒரு தகுந்த இடமாகத்தான் பார்த்துக் கல்யாணம் செய்தோம். அவள் புக்ககத்துக்காரர் கொஞ்சம் பழைய சம்பிரதாயங்களையொட்டி நடப்பவர்போல் காணப்பட்டது. நான் பார்வதியின், மாமியாரிடமும், வேறு சில பந்துக்களிடமும் சந்தோஷம் நிரம்ப, "என்னவோ, இந்தக் காலத்தில் கல்யாணமாவதற்கு முன் பெண்கள் பெரியவர்களாவதை மறைக்கிறார்களாம். பயப்படுகிறவர்களுக்குத்தான் அந்தக் கஷ்டமெல்லாம் வந்து சேரும். நான் தைரியமாக இருந்தேன், இவள் பெரியவளானால் பகிரங்கப்படுத்திவிடலாம் என்று. நான் தைரியமாக

இருந்ததால்தான், இவளுக்கு அப்படியெல்லாம் ஏற்படவைக்கவில்லை கடவுள். இவள் கல்யாணம் சாரதா சட்டத்தையும் மீறாமல் நம் ஆசாரத்தையும் மீறாமல் நடந்துவிட்டது. அவள் தாய் வம்சத்தைக் கொண்டிருக்கிறாள், அப்பா வம்சத்தைக் கொள்ளவில்லை" என்று மிகவும் உண்மை சொல்பவள்போல் சொல்லிக்கொண்டேன். அவர்கள் முழு மனத்துடன் என் சொற்களை ஏற்பது கண்டு நானே என் திறனை மெச்சிக்கொண்டேன்.ம்

பார்வதியின் புக்ககத்தார் இருந்த ஊர் தொலைவில் இல்லாததால் அவளுடைய மாமியாரும் நாத்தனாரும் இரண்டு குழந்தைகளுங்கூட அவள் அகத்துக்காரரோடு ஆடிப் பண்டிகைக்கு வந்தார்கள். இந்தக் காலத்தை ஒட்டி நடப்பவர்களாக இருந்தால் நாசுக்காகப் பிள்ளையை மாத்திரம் அனுப்புவார்கள். ஆனால் இவர்கள் பக்கமாக இருந்ததாலும், பட்டண வாசத்தார் அல்லாததாலும் எல்லோருமாகவே வந்தார்கள். அப்போதுதான் பார்வதியின் வாழ்க்கையில் அந்த அதிர்ச்சி ஏற்பட்டது.

அவள் வீட்டிற்கு விலக்காகிவிட்டாள். அதை முதலில் தனிமையில் என்னிடம் வெளியிட்டாள். அதுவரையில் நான் பிறத்தியாருக்குத் தெரியாமல் வைத்திருந்தாலும், வீட்டிற்குள் ஒதுக்கினாற்போலவே வைத்திருந்தேன். தீட்டைக் கலப்பது எனக்கு இஷ்டமில்லை. அந்த நல்ல வழக்கம் பல நாளாக ஏற்பட்டுவிட்டதால், ஆடிப்பண்டிகையும் அதுவுமாக அப்போது அவளை அகத்தில் சேர்ப்பது எனக்கு இஷ்டமில்லை. கல்யாணமும் ஆகி மூன்று மாத காலம் ஆகிறது. அவள் அன்றுதான் முதல் முதலில் பெரியவள் ஆனாள் என்று கூறி, மேலே செய்யவேண்டிய காரியங்களைச் செய்துவிடலாம், காரியத்தோடு காரியமாக என்று தோன்றிற்று. அவள் புக்ககத்தாரும் கூடியிருக்கிறார்கள்; மறுபடியும் அழைப்பு அனுப்புவது, அவர்களுக்குச் செலவு வைப்பது முதலிய தொந்தரவுகள் இல்லாமல் நல்லவேளையாக இப்போதே நடத்திவிடும்படியாக நேர்ந்ததே என்று ஒருபுறம் திருப்தியும் உண்டாயிற்று. சரி; இப்போதே நடத்திவிடுவதுதான் உசிதம் என்று எனக்குள் சமர்த்தாக யோசனைகள் செய்து முடிவு கட்டிவிட்டேன்.

உடனே, செய்தி பரப்பினேன்; அன்றுதான் அப்போதுதான் அவள் புஷ்பவதியானாள் என்று. அந்த நிமிஷமே நான் அழுத்தந் திருத்தமாக அவர்களுக்குக் கூறி, மனத்தில் பதியச் செய்து சந்தோஷம் பொங்கத் தடபுடல் செய்ய ஆரம்பித்துவிட்டேன்.

அரைமணி நேரங்கழித்து, வாசலில் நாற்காலியில் அமர்ந்து மும்முரமாகப் புத்தகம் படித்துக் கொண்டிருந்த மாப்பிள்ளை தடதடவென்று உள்ளே நுழைந்தார். அவர் குரல் இடி இடித்தாற்போல் இருந்தது; பேசிய வார்த்தைகளும் இடி விழுந்தாற்போலத்தான் இருந்தன.

"சட்! உங்கள் பெண் முகத்தில் விழிப்பதே மகா பாபம்! இத்துடன் ஒழிந்தது உறவு" என்றார்.

"என்ன என்ன!" என்று பதறிப் போனோம், ஒன்றும் தெரியாமல். மாப்பிள்ளையின் தாய், "என்னடா வாசு, என்ன சமாசாரம்?" என்றாள்.

அதற்கு, "பார் நீயே! நல்ல நாட்டுப்பெண் வாச்சிருக்காள் உனக்கு! நாளும் நட்சத்திரமும் அவளைப்பற்றிச் சொல்வதை, நீயே பார்த்துக்கொள்" என்று கையில் வைத்திருந்த பஞ்சாங்கத்தைக் கூடத்தில் வீசி எறிந்தார்.

அவர் முகத்தைப் பார்க்கவே பயங்கரமாக இருந்தது. ஏதோ கொஞ்சம் சமாளித்துக் கொண்டு நானே பேச முன்சென்றேன்.

"ஓ! அதற்காகச் சொல்கிறீர்களோ? அதெல்லாம் பரவாயில்லை; சாந்தி செய்துவிட்டால் ஒரு தோஷமும் இராது. யாரை வேணுமானாலும் கேட்டுப் பாருங்கள். அதனால் தப்பு ஒன்றும் இல்லை" என்றேன்.

"ஓகோ! சாந்தி செய்தால் சுபாவம் மாறுமோ? மாறினாலும் இவளுக்கு மாறாது. என்னதான் சாந்தி கீந்தி பண்ணினாலும் தோஷம் நீக்க முடியாத பெண்டாட்டி வாய்திருக்கிறாள் எனக்கு! ஒரு நல்ல அம்சமாவது இருந்தால்தானே? திதி, வாரம், நட்சத்திரம் ஒவ்வொன்றும் எவ்வளவு கேவலமாகக் கூறுகிறது. நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள். இனிமேல் இங்கே ஒரு நிமிஷங்கூட இருக்க இஷ்டப்படமாட்டேன். ...என்ன அம்மா! புறப்படப் போகிறாயா இல்லையா?" என்று ஒரே மூச்சாக இரைந்துவிட்டு வாசலுக்குப் போய்விட்டார்.

"இருடாப்பா! நீ போய்விட்டால், நாங்கள் எதற்கு இங்கே இருக்கிறோம்? என்ன வேலை எங்களுக்கு? சித்தே இரு. சாமான்கள், பெட்டி, படுக்கையெல்லாம் எடுத்துண்டு வரலியே; எடுத்துண்டு வந்துடு" என்றாள் அவர் தாய்.

"நான் வீட்டில் அடி எடுத்து வைக்க மாட்டேன். நீங்களே எடுத்துண்டு வர முடிந்தால் வாருங்கள். இல்லாவிட்டால் கிடக்கட்டும். தாலி கட்டின புருஷன் ஒருவன் இருக்கிறான் என்ற நினைவு, அவற்றாலாவது இருக்கட்டும், அந்தத் தேவடியாளுக்கு" என்றார்.

சொல் போதுமா ராஜம்? எங்களுக்கு எப்படி இருக்கும் பாருங்கள். ஏற்கனவே அவர் போட்ட கூச்சலில் நடுங்கிவிட்டோம். பார்வதியின் பதுங்கிய உருவத்தைச் சடாரெனக் கவனித்திருந்த எனக்கு அவள் முகத்தில் பிரேதக்களை கண்டு, வருத்தமும் துக்கமும் சொல்ல முடியவில்லை. இந்தச் சொல்லும் ஈட்டிபோல் பாயவே, "ஆ! என்ன சொல்கிறார்!" என்று பிரமை தட்டி அப்படியே சமைந்து போனேன்.

"ஐயோ, அம்மா!" என்ற பார்வதியின் அலறல் சப்தம் என் காதுகளில் அடுத்தபடி ஈட்டிபோல் பாய்ந்தது. அன்றைக்கும் இன்றைக்கும் கூட என்னை வதைப்பது, அந்த அம்மா என்ற வார்த்தைதான். 'அம்மா என்று அலறினாளே! அக்காவால்தானே இந்தப் பேச்சு வந்தது; அம்மா இருந்தால் இப்படி நடந்திராது என்று நினைத்துவிட்டுக் கதறினாளோ?' என்று சதா சர்வகாலமும் மாய்ந்துபோனேன்.

திவ்வியமான திங்கட்கிழமையில் பருவம் அடைந்த அவளை, அந்த நாளுக்கும் நட்சத்திரத்திற்கும் அவள் பதிவிரதை, இனிய குணங்கள் படைத்தவள், புத்திர சௌபாக்கியவதி என்றெல்லாம் சாஸ்திரங்கள் போற்றுவதைப் பிறர் அறியும்படி நான் செய்திருக்க வேண்டியதுபோக, பதிதை, மலடி, விதவை, தரித்திரம் என்றெல்லாம் சாஸ்திரம் கூறும் அந்த நாளில் அந்த வேளையிலா, அவள் உண்மையாகப் புஷ்பவதியானாள் என்று பொய் சொல்ல நேரவேண்டும்? முன் யோசனையின்மையும் மதியின்மை செய்த சதி இது!

யாருடைய புத்திமதியையும் ஏற்கக்கூடியவராக இல்லை, மாப்பிள்ளை. மூர்க்கப் பிடிவாதத்துடன் ஊர் திரும்பினவர்தான். அப்புறம் ஒரு வருஷம் வரையில் யாதொரு விதமான மாறுதலையும் அவரிடம் நாங்கள் காணவில்லை.

பார்வதி நாளுக்கு நாள் உருகி உருக்குலைந்து போனாள். கணவன் கூட்டிக்கொள்ளவில்லை என்றாலே என்ன பாடுபடும் ஒரு பெண்ணின் மனசு!

இப்படி இருக்க, "சாஸ்திரத்தில் அபார நம்பிக்கை இருக்கிறதே அக்கா! நான் திங்கட்கிழமை ருதுவானது தெரிந்து, பதிவிரதை என்று போட்டிருப்பதைப் பார்த்தால், என்ன சந்தோஷப்பட்டிருப்பார்! நமக்கும் எவ்வளவு சந்தோஷமாக இருந்திருக்கும்!" என்று பகர்ந்தாள் ஒரு நாள், வாய் திறந்து.

எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. ஒரு நாளும் இல்லாமல் அவள் அன்று அப்படிக் கூறியது என்னை என்னவோ சங்கடம் செய்தது. அந்த ஒரு நாள் அவள் வாய்விட்டுக் கூறிய சொற்கள் என் மனத்தில் உறுத்திக்கொண்டே இருக்கவே, நான் அப்புறம் அவளை அணுகி, "பார்வதி, உன் அகத்துக்காரருக்கு எழுதிவிடலாமா உண்மையை? நாங்கள் பொய் சொன்னோம், மறைத்தோம், உண்மை அதுவல்ல என்று சொல்லிவிடலாமா?" என்றேன்.

"வேண்டாம் அக்கா; பொய் சொன்னார்கள் என்று அது வேறே கோபம் வந்தாலும் வரும். இல்லாவிட்டால் 'தப்பித்துக்கொள்ளப் பேச்சை மாற்றுகிறீர்களோ?' என்று சொன்னாலும் சொல்வார். அவர் யோசனை செய்து எதுவும் பேசுவதாகத் தோன்றவில்லை. அன்று பார்க்கவில்லையா அவர் முரட்டுக்கோபத்தை எனக்கு நல்ல காலம் இருந்தால், நிச்சயம் எந்தவிதத்திலாவது நல்ல மனசு வரும். நாம் வலுவில் சொல்லாமலேயே திரும்பும் மனசு! எனக்கு நல்ல காலம் வராவிட்டால், நாம் வலுவில் உண்மையைச் சொன்னதுதான் மிச்சமாகும். நாம் பொய் சொன்னோம் என்பதுதான் அவர் மனத்தில் நிலைத்துவிடும். இருக்கட்டும், நடக்கிறது. நடக்கட்டும். நாம் ஒன்றும் சொல்ல வேண்டாம்" என்று பதில் கூறிவிட்டாள்.

ஆனால் என் மனம் திருப்தி அடையவில்லை. அவள் கூறியதைக் கேட்டுவிட்டு என்னால் யாதொரு நடவடிக்கையும் அவள் விஷயத்தில் எடுத்துக்கொள்ளாமல் இருக்க முடியவில்லை.

அவரிடம் சொல்லி மாப்பிள்ளைக்குக் கடிதம் ஒன்று எழுதச் சொன்னேன். பார்வதியோடு பழகியபின்பு, அவள் குணங்களை அறிந்து அவளைப்பற்றி அபிப்பிராயம் கொள்ளும்படி, கடிதத்தில் கேட்கச் சொன்னேன்.

மாப்பிள்ளை சுருக்கமாகச் சுருக்கென்று பதில் ஒன்று போட்டுவிட்டார்.

"உங்கள் பார்வதியோடு பழகி அவள் சுபாவம் அறிந்துகொள்வது என்பது நடக்க முடியாத காரியம். சாஸ்திரத்தில் நான் கொண்டுள்ள நம்பிக்கை தளராது" என்று எழுதிவிட்டார்.

இப்படி இருக்கையில், நடைப்பிணமாயிருந்த பார்வதியிடம் ஒரு மாறுதல் காணப்பட்டது. நாளுக்கு நாள் சுறுசுறுப்பு அடைந்து வந்தாள். 'ஏதோ யோசனை செய்கிறாள்; ஒரு தீர்மானத்திற்கு வரப்பார்க்கிறாள்' என்று நினைக்கும்படி இருந்தது.

அவள் முகத்தில் தெளிவு கண்டு மகிழ்ந்த நான், "பாவம்! முகத்தில் களை வருகிறது; பார்வதிக்கு. அவளும் எவ்வளவோ முயன்று பார்க்கிறாள், வருத்தப்படக்கூடாது என்று" என்று அங்கலாய்ப்புடன் அவரிடம் சொன்னேன்.

"வருத்தப்பட்டு என்ன செய்வது அக்கா? நான் வாழ்நாளை வீணாக்க விரும்பவில்லை. ஏதோ படித்ததை ஆதாரமாக வைத்துக்கொண்டு, பிழைப்புக்கு வழி தேட நிச்சயம் செய்துவிட்டேன்" என்றாள் உடனே.

"என்ன! பிழைப்புக்கு வழியா? இங்கே என்ன பணம் இல்லையா, காசு இல்லையா? நீ சொல்வது புரியவில்லை! நீ இங்கே இருந்தால்தான், இந்தக் கொஞ்சநஞ்ச உசிராவது

நிற்கும் எனக்கு. வீட்டை விட்டு நகர்ந்தாயோ, பட்டணம் கிட்டணம் போனாயோ, அப்புறம் அக்காவைப் பார்க்கமாட்டாய். அப்படிப் பார்த்தாலும் பைத்தியக்காரியாகத்தான் பார்ப்பாய்" என்று அதட்டினேன்.

அதற்கு அவள், "ஐயோ அக்கா, பயப்பட்டுவிட்டாயே! அதற்குச் சொல்லவில்லை நான். என் மனசு தேறுவதுதானே நான் பிழைப்பதற்கு வழி, இல்லையா? எனக்குக் கதை கட்டுரை எல்லாம் எழுதணும்னு ஆசையாக இருக்கு. நிறையக் கருத்துக்கள் தோணறது. எல்லாத்தையும் சேர்த்து எழுதிக் கக்கினால்தான் என் மனசு ஆறும். எழுத்து வேலையில், கவலை தெரியாமல் பொழுதுபோகும்" என்றாள்.

"அப்படியானால் பேஷாக எழுதம்மா. நீ எங்கள் கண்ணுக்கு எதிரேயே இருந்துகொண்டு, அதுவும் கவலைப்படாமல் இருந்தால், அதற்குத் தடை என்ன அம்மா? இஷ்டப்படி எழுது. மனசுக்குக் கவலையில்லாமல் இரு; அதுவே போதும்" என்று நான் முழு மனத்துடன் கூறிவிட்டேன்.

அப்புறம் அவள் சதா எழுதுவதிலேயே முனைந்திருந்தாள். எத்தனை எழுதினாளோ, என்ன எழுதினாளோ, அவளுக்குத்தான் தெரியும். அவளும் சொல்லவில்லை; நாங்களும் கேட்கவில்லை.

அவள் பெயருக்குக் கடிதங்கள் வரும். தபால்காரனிடமிருந்து கடிதங்களை வாங்குவதில் அவள்தான் முதல். தயாராக வாசலில் காத்திருந்து, வாங்கிக்கொண்டுவிடுவாள். அவள் பெயருக்கு வரும் கடிதங்களை அவளே வைத்துக்கொள்வாள். தனக்கு வந்திருக்கிறது என்பதை மாத்திரம் சொல்வாள். "என்னம்மா கடிதம்?" என்று கேட்டால், சில சமயம் வருத்தத்துடன், "கதையைத் திருப்பிவிட்டார்கள் அக்கா!" என்பாள். சில சமயம் சந்தோஷத்துடன், "கதையை ஏற்றுக்கொண்டுவிட்டார்கள் அக்கா!" என்பாள்.

"எப்போது வெளியாகும்?" என்போம்.

"கொஞ்சநாள் ஆகும் அக்கா! உடனே வெளிவராது" என்பாள்.

"நீ எழுதும் கதையை நாங்கள் படிக்கிறோம், கொடேன்" என்று நாங்கள் கேட்டதில், அவள்; "அக்கா, நான் யாருக்கும் எழுதுவதை முதலிலேயே காட்டமாட்டேன். பத்திரிகையில் நிச்சயம் வெளிவரும், புனைபெயரில். அப்போது அவற்றைப் படித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை அறியப்போகிறேன். நான் எழுதினேன் என்றால், அது எப்படி இருந்தாலும் உயர்ந்ததாகத் தோன்றும். உண்மையான அபிப்பிராயம் அறியவேணும் நான்" என்றாள்.

இப்படி வருத்தம் தெரியாமல் ஒரு வருஷம் காலந்தள்ளிவிட்டோம். ஒரு நாள் மாப்பிள்ளையிடமிருந்து அத்தி பூத்தாற்போல் கடிதம் ஒன்று வந்தது, அவர் பெயருக்கு.

'அதிசயமாக இருக்கே!' என்று நினைத்துக் கொண்டே பிரித்தால், உள்ளே சமாசாரம் அதிசயத்திலும் அதிசயமாக இருந்தது.

'பார்வதியைக் கொணர்ந்து விடுங்கள்' என்ற மூன்றே வார்த்தைகள், கவருக்குள் வெள்ளைத்தாள் ஒன்றில் நடுவே காணப்பட்டன.

'இதென்ன, திடீர் மாறுதல்! பார்வதியின் சூழ்ச்சி ஏதாவது இருக்குமோ?' என்று ஒரு கணம் மின்னல்போல் தோன்றி மறைந்தது.

"பார்வதி, இங்கே பார். மாப்பிள்ளை கடிதம் போட்டிருக்கிறார்" என்று நான் சந்தோஷக் கூக்குரலிட்டேன்.

"என்ன அக்கா! கொணர்ந்து விடச்சொல்லி இருக்கிறாரா?" என்று சாவதானமாக, வெட்கங்கலந்த புன்சிரிப்புடன் கேட்டுக்கொண்டே வந்துவிட்டாள் பார்வதி.

"என்னமாகத் தெரியுமடி உனக்கு?'

"தெரியும். மாமியார் போன வாரம் எழுதியிருந்தார்; பிள்ளை மனம் மாறும்போல் தோன்றுகிறது என்று. மாறினதற்கு அத்தாட்சியாகக் கடிதம் அவரிடமிருந்தே வந்துவிட்டதாக்கும்."

"மாமியார் எழுதினாரா? புதுசு புதுசாச் சமாசாரம் வெளிவருகிறதே! விவரமாகத்தான் சொல்லேன், தெரியட்டும்' என்று நான் பொறுமை இழந்து கேட்கவே, அவள் எல்லாவற்றையும் விவரமாய்க் கூறலானாள்.

"எனக்கு என்னவோ தோன்றிற்று, அக்கா, மாமியார் அனுகூலமாக இருப்பார் என்று, பிள்ளைகள் பெண்டாட்டியிடம் புதுசுலேயே பிரியம் காட்டிவிட்டால்தான், மாமியார்மார்கள் பொறாமையினால் கொடுமை செய்வார்கள், நாட்டுப் பெண்களிடம். ஆனால் இவரோ என்னை வெறுக்கிறாரே, மாமியாரும் வெறுப்பாரா என்ன? இரக்கம் வராதா? என்றும் தோன்றிற்று. சில மாமியார்கள் இதுமாதிரி சமயங்களில், பிள்ளையுடன் சேர்ந்துகொள்ளலாம்; ஆனால் என் மாமியாரைப் பார்த்ததில் அப்படிப்பட்டவராகத் தோன்றவில்லை. முதலில் மாமியாரின் அன்பிற்குப் பாத்திரமாக வேணும் என்று நிச்சயம் செய்துகொண்டேன்.

"எத்தகைய மாமியாரும் பதவிசான நாட்டுப் பெண்ணின் பக்தி விநயங்களுக்குக் கட்டுப்படுவாள். தன் நாட்டுப்பெண்ணிடம் ஒரு மாமியார் விரும்புவது, அடக்க ஒடுக்கமும் அன்பும் பணிவுந்தானே என்றும், நல்ல வேளையாக என் மனத்தில்பட்டது. என்னவோ கடவுள் அருள்தான், அந்த மகத்தான உண்மையை உணர்ந்தேன்; நல்லது நடந்துவிட்டது.

"நான் முதல் கடிதம் எழுதினதற்கே, மாமியார் பிரியமாகத்தான் பதில் எழுதியிருந்தார். ஒரு மாதம் கழித்து வந்தாலும், எனக்குத் திருப்தியாகவே இருந்தது. நான்கைந்து கடிதங்கள் வரையில் என் நிலைமையைப்பற்றி அனுதாபம் காட்டினார். ஆனால் பிள்ளைக்கு தாம் புத்தி புகட்டுவதாகப் பிரஸ்தாபமே இல்லை. அப்புறம் இரண்டு கடிதங்களில் பிள்ளையைக் கடிந்து கொண்டார். 'அவனுக்குப் புத்திவராது; முரட்டுப் பிடிவாதக்காரன்!' என்று எழுதினார். அப்புறம் படிப்படியாக மாறுதல். தாம் பிள்ளைக்குப் படித்துப் படித்துச் சொல்வதாக எழுதினார். ஆனால் என்னைப்பற்றி பேச்சு எடுத்தாலே அவர் முகம் சிணுங்குவதாக எழுதி வருத்தப்பட்டுக்கொண்டார். அப்புறம் எழுதத் தொடங்கினார். முன்பு என்னைப் பற்றிப் பேசினாலே எரிந்து விழுந்துகொண்டிருந்தவர், பொறுமையாக, என்னைப்பற்றி ஏதாவது கேள்வியும் எப்போதாவது பேச்சுவாக்கில் கேட்கிறார் என்று. படிப்படியாக மனசு இளகிக் கடிதம் போட்டிருக்கிறார், கொணர்ந்துவிடச் சொல்லி!' என்று கூறி ஓய்ந்தாள்.

நாங்கள் இதுவரையில் வாயைப் பிளந்தவாறு அசைவற்று அவள் கூறியதைனைத்தையும் கேட்டுக்கொண்டிருந்தோம்.

"ஏன் பார்வதி, உனக்கு எப்படி இவ்வாறு யோசனையும் விவேகமும் வந்தன?" என்று மெல்லிய குரலில் கேட்டார் அவள் அத்திம்பேர்.

நான், "என்னதான் அப்படி எழுதினாய் உன் மாமியார் அவ்வளவு அநுகூலமாயிருக்க எப்படியெல்லாம் எழுதினாய்?" என்றேன்.

எங்களுக்கு அப்போது மனத்தில் மேலிட்டு பொங்கியது சந்தோஷமா, ஆச்சரியமாக, பார்வதியைப்பற்றிப் பெருமையா என்றால் பார்வதியைப்பற்றிப் பெருமைதான்.

"இதோ இரு அக்கா. கடுதாசி நகல் எல்லாம் வச்சிருக்கேன். மாமியார் கடுதாசி எல்லாங்கூட இருக்கு" என்று, ஓடிப்போய் ஒரு 'பைலை' எடுத்து வந்தாள்.

"உங்களைப்போன்ற நல்லவர்கள் மாமியாராக வாய்த்தும், நான் கொடுத்து வைக்காத பாவியானேன். உங்களுக்குப் பணிவிடை செய்து, உங்கள் அன்பையும் ஆசியையும் பெற்று நான் பெருமையடையக் கொடுத்துவைக்கவில்லை" என்று முதல் கடிதத்தில் எழுதியிருந்தாள்.

"சாதாரணமாக அன்பான புருஷர்கள் கிடைப்பார்கள். அன்பான மாமியார் வாய்ப்பதற்குத்தான் பல ஜன்மங்களில் புண்ணியம் செய்திருக்கவேண்டும். ஏதோ மகத்தான புண்ணியம் செய்துதான் உங்களை மாமியாராக அடைந்திருக்கிறேன் நான். ஆனால், என்னால் உங்களுக்கு இந்த வயசுகாலத்தில் ஒருவிதமான சுகமும் இல்லை." - இப்படி ஒரு கடிதம்.

"அம்மா என்று வாய் திறந்து கூப்பிட நமக்கு யாருமில்லை இனி' என்று சிறுவயசில் நினைத்திருக்க நான் கல்யாணமானதும், அம்மா என்று இனி நான் அழைக்க எனக்கும் ஓர் அம்மா கிடைத்துவிட்டார் என்று சந்தோஷித்தேன். கடிதத்தில் எழுத முடிகிறதே தவிர, வாயார அம்மாவென்று நான் உங்களை அழைக்கும் நன்னாள் எப்போது வருமோ!"

"நீங்கள் என்மீது கொண்டிருக்கும் அன்பும் அநுதாபமுந்தான் என் மனசு ஆறுவதற்குக் காரணம். உங்கள் அன்பும் ஆசியுந்தான் என்னைக் கஷ்டங்களினின்று காப்பாற்றப் போகின்றன."

"கருணையின் உருவான உங்கள் வயிற்றில் பிறந்த அவருக்கு, என்றாவது ஒரு நாள், என் மேல் நிச்சயம் கருணை பிறக்கும்."

"நீங்கள் என்பால் கொண்டுள்ள அன்பின் பலத்தாலேயேதான் அவர் மனம் இளகப் போகிறது. பெரியவரான உங்களுக்குச் சுசுரூஷை செய்து ஆசிகள் நிறையப் பெறும் எனக்கு ஒருவிதக் குறையும் பிற்காலத்தில் இராது.

"நான் இங்கே அகத்தில், அக்கா அத்திம்பேரிடங்கூட என் மனசில் தோன்றுவதையெல்லாம் சொல்லிக்கொள்வதில்லை. கூச்சமாக இருக்கிறது. உங்களுக்குக் கடிதம் எழுதுவதும், உங்கள் அன்பும் பரிவும் நிறைந்த கடிதங்களைப் பெறுவதுந்தான் மனத்திற்குச் சாந்தியளிக்கின்றன."

இப்படியெல்லாம் ஒவ்வொரு கடிதத்திலும், பற்பல விதமாகத் தன் மனநிலையைக் காட்டி எழுதியிருந்தாள் பார்வதி.

மாமியார் மெள்ள மெள்ள மனம் உருகிப் போய், பிள்ளையை நயந்துகொண்டும் கடிந்து கொண்டும், பிள்ளையின் மனசை முரட்டுப் பிடிவாதத்திலிருந்து தளர்த்திவிட்டாள். கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையாதா?

"ருதுபலனில் நம்பிக்கை போய்விட்டதா?" என்று கேட்டாள் ராஜம்.

"ஊஹூம்! அதெல்லாம் தளரவில்லை அம்மா. உண்மை தெரிந்துபோச்சு. திங்கட்கிழமையில்தான் தம் மனைவி பெரியவள் ஆனாள் என்று அறிந்து, பதிவிரதை என்று போட்டிருப்பதன் உண்மையை, அப்போது முதல், அவளுடைய ஒவ்வொரு பேச்சிலும் நடத்தையிலும் காண்கிறார். அவள் மேல் அடங்காத ஆசை இப்போது. மெள்ள மெள்ள நிதானமாக வேரூன்றின அன்பு அல்லவா?

அவர் பார்வதியைக் கொணர்ந்துவிடும்படி எழுதினதும் மனப்பூர்வமாக இல்லையாமே? அம்மாவின் நச்சுக்காகத்தானாம். அம்மா சொன்னதை எல்லாம் கேட்டு, பார்வதியின் பக்தி விநயங்களை அறிந்தாலும், அவருக்கு அவள் விஷயத்தில் நல்ல நம்பிக்கையே உண்டாகவில்லையாம். மனசு ஒவ்வொரு சமயம் மாறும்போல் இருந்தாலும் உடனே, 'நன்றாக வேஷம் போடுகிறாள்!' என்ற எண்ணம் தோன்றி, மேலும் கல்லாகிவிடுமாம் மனசு. ஆனால் அம்மாவின் நச்சு மிக அதிகமாகி, இரவும் பகலும் அதே பேச்சாக இருக்கவே, நாங்கள் பார்வதியோடு பழகிய பின்பு அவள் சுபாவத்தை அறியுமாறு எழுதினது நினைவு வந்ததாம். அம்மாவையும் திருப்தி செய்தாற்போல் இருக்கும் என்று பார்வதியை வருவித்து நேரில் அவள் பதவிசையும் யோக்கியதையையும் தெரிந்து கொண்டால் போகிறது என்று தோன்றிற்றாம். "அம்மா, அவன் வந்து இருக்கட்டும் இங்கே, உனக்கு ஒத்தாசையாக. நான் தடுக்கவில்லை. அவள் பாடு, உன் பாடு. ஆனால் நீ அவளை நாட்டுப் பெண்ணாகப் பாவித்தாலும் நான் அவளை உன் நாட்டுப் பெண்ணாக நினைக்கவே மாட்டேன். அது மாத்திரம் நிச்சயம்; தெரியுமோல்லியோ!" என்றுதான் இசைந்து சொன்னாராம், அம்மாவிடம். மாமியார், "பிள்ளை இப்படிச் சொல்கிறான்" என்று எழுதினதற்கு இவள், "நான் அவருக்காக அங்கே வராவிட்டாலும் உங்களுக்காகவே அங்கே வர விரும்புகிறேனம்மா" என்று எழுதிவிட்டாளாம். கணவன் மனம் அங்கே போனபின்பு திரும்பும் என்ற தைரியம் இருந்ததாம் இவளுக்கு.

அங்கே போகப் புறப்படுவதற்கு முன் அகத்திலிருந்த 40, 41, 42-ஆம் வருஷத்து டயரிகள் மூன்றையும் அத்திம்பேரிடம் எடுத்து வந்தாள். "அத்திம்பேர், எனக்கு ஒரு காரியம் செய்துதரவேணும். இதோ இந்த 40-ஆம் வருஷ டயரி மேல், 'பார்வதி வாழ்க்கையில் முக்கியமான நிகழ்ச்சிகள் மே, ஆகஸ்ட் மாதங்களில் நடந்தன' என்று எழுதுங்கள். 41-ஆம் வருஷ டயரிமேல் 'பார்வதி வாழ்க்கையில் முக்கியமான நிகழ்ச்சிகள் மே ஆகஸ்ட் மாதங்களில் நடந்தன' என்று எழுதுங்கள். 42-ஆம் வருஷ டயரிமேல், 'பார்வதி வாழ்க்கையில் முக்கியமான நிகழ்ச்சி அக்டோபர் மாதத்தில்!' என்று எழுதுங்கள்" என்று கூறி மூன்று டயரிகள் மேலும் குறிப்புகள் எழுதி வாங்கிக்கொண்டாள். பார்வதி எங்களிடம் வந்தது முதல் அன்று வரையில் நடந்ததையெல்லாம் அவள் அத்திம்பேர் டயரியினுள் தேதி பார்த்துக் குறித்துத்தான் வைத்திருந்தார். ஆனால் அது போதாதென்று இந்தக் குறிப்புக்களையும் டயரிகள்மேல் எழுதி வாங்கிக்கொண்டாள்.

டயரிகளையும் பத்திரமாகப் பெட்டியில் எடுத்து வைத்துக்கொண்டாள். புக்ககம் புறப்படும்போது திட்டம் ஏதோ போட்டிருக்கிறாள், புருஷனை வழிக்குக் கொண்டு வருவதற்கு என்பதை அறிந்த நாங்கள் அவளைப்பற்றி அதிகம் கவலைப்படவில்லை.

பார்வதி அங்கே போய் ஒரு மாதம் ஒன்றரை மாதம் வரையில் மாப்பிள்ளை இவள் விஷயத்தில் கொஞ்சங்கூட மனம் மாறவில்லையாம். இவள் மாமியாரோடேயே ஒட்டிக்கொண்டு, சுற்றிக்கொண்டு இருப்பாளாம். மாமியாரால்தான் தனக்குச் சுகம் ஏற்படப் போகிறது என்ற நம்பிக்கையே இவளுக்குத் தைரியமாய் இருந்ததாம். புருஷன் விஷயத்தில் ஒரு மாறுதலும் காணோமே, இன்னும் முறுக்காக இருக்கிறாரே என்ற பயம் முதலில் கொஞ்சம் இருந்தாலும், அங்கே போய் இருந்ததில் ஏற்பட்ட உத்ஸாகத்தாலும், மாமியார் காட்டிய பிரியத்தாலும், இவள் சிறிதும் வருத்தப்படாமல், மேலும் மேலும் திருப்தியும் சந்தோஷமும் அடைவாளாம். இவள் நல்ல குணத்தையும் பணிவையும் பக்தி சிரத்தைகளையும் பார்த்துப் பார்த்து மாமியார் பூரித்துப் போவாளாம். மாமியார் நாட்டுப்பெண் மனங்களே முதலில் ஒன்றுபட்டன.

பார்வதி ஒரு நாள் புருஷன் கண்ணுக்குத் தென்படுகிறாப்போலத் தேங்காய் எண்ணெய், சீப்பு, குங்குமம் எல்லாம் வைக்கும் அலமாரியில், தான் எடுத்துப் போயிருந்த மூன்று டயரிகளையும் வைத்திருந்தாளாம். மாப்பிள்ளை என்னவோ ஏதோ என்று டயரிகளைப் பார்க்கக் கையில் எடுத்தபொழுது, டயரிகளின்மேல் இருந்த குறிப்புகளைப் பார்த்து, ஆவலால் தூண்டப்பட்டுப் பிரித்துப் பார்க்கலானாராம்.

முதலில் 42-ஆம் வருஷம் டயரிமேல் இருந்த குறிப்பைப் பார்த்தாராம். '42-ஆம் வருஷம் அவள் வாழ்க்கையில் என்ன முக்கியமான சம்பவம் நடந்தது? நான் தான் 41-ஆம் வருஷமே சண்டை பிடித்துவிட்டேனே அவர்களுடன்!' என்று ஆச்சரியத்துடன், அந்த டயரியில் அக்டோபர் மாதப் பக்கங்களைப் புரட்டினாராம். 20-ஆம் தேதியின் கீழ், 'பார்வதி கதை கட்டுரைகள் எழுத முனைந்திருக்கிறாள். கடவுள் அவள் மனத்திற்குச் சாந்தி அளிப்பாராக!' என்று எழுதியிருந்ததாம். 'இதென்ன கூத்து! கதை வேறே எழுதுவாளா இவள்?' என்று வியந்த வண்ணம், 41-ஆம் வருஷ டயரியில் மே ஆகஸ்ட் பக்கங்களைப் புரட்டினாராம். மே மாதத்தில் 7-ஆம் தேதியின்கீழ், 'பார்வதியின் வாழ்க்கையில் புனித நாள்; அவள் திருமணக் கோலத்தில் திகழும் நாள்' என்றும், அடுத்துத் திருப்பின ஆகஸ்ட் மாத்தில் 14-ஆம் தேதியின்கீழ், 'பார்வதி வாழ்க்கையில் பெரிய அதிர்ச்சி! கணவனால் நிராகரிக்கப்பட்டவளானாள். உலகத்தார் வாய்க்குப் பயந்தும் அவள் நன்மையை நாடியும் அக்கா அத்திம்பேர் செய்த காரியம் அவளுக்குத் தீமையை விளைவித்துவிட்டது. 40-ஆம் வருஷம் நிகழ்ந்ததை 41-ஆம் வருஷம் நிகழ்ந்தது என்று நாங்கள் சொன்ன பொய்யின் விளைவு, ஒரு பாவமும் அறியாத, தாய் தந்தையர் இல்லாத குழந்தை பார்வதியைக் கணவரும் ஏற்க மறுக்கிறார்' என்று எழுதியிருந்ததாம். 'என்ன! பொய்யாவது, விளைவாவது?' என்று மேலும் ஆச்சரியம் கொண்டு, 40-ஆம் வருஷத்து டயரியில் ஜூன் பத்தாம் தேதி திங்கட்கிழமையின் கீழ், 'பார்வதி புஷ்பவதியான புனிதமான நாள்' என்று எழுதியிருந்ததைப் பார்த்தாராம். ஆச்சரியத்தால் திகைத்துப்போய் டயரிகளை அப்படியே போட்டுவிட்டு, வாசலுக்கு வந்து குட்டி போட்ட பூனைபோல உலாத்து உலாத்து என்று உலாத்தினாராம். சந்தோஷமோ ஆச்சரியமோ அநுதாபமோ கோபமோ என்று சொல்லத் தெரியாத கொந்தளிப்பு ஏற்பட்டதாம் மனத்திலே.

அன்று இரவு, சாப்பாட்டின்போது அவர் தாய் தினம்போல், "என்னவோப்பா, உனக்கு என்னிக்குத்தான் நல்ல புத்தி வரப்போகிறதோ? உனக்குப் பரிமாறுகிறதுதான் என் காரியமே தவிர, மற்றதை எல்லாம் பாவம், அந்தப் பெண்தான் செய்கிறது! அவள் என்ன சமையல்காரியா? காரியம் செய்யத்தானா உரிமை அவளுக்கு, இந்த வீட்டிலே? உன்னைக் கல்யாணம் பண்ணிண்டதோஷந்தானே வீட்டுப் பொறுப்பு உரிமை எல்லாம் ஏற்பட்டது அவளுக்கு? உரிமை வந்தாலும் சுகப்படுவதற்கு வரவில்லை; கஷ்டப்படுவதற்கும் உழைத்து ஓடாய்ப் போவதற்குந்தான் ஏற்பட்டதுபோலிருக்கு" என்று அலுத்துக்கொண்டாளாம்.

அந்தச் சமயத்திற்குக் காத்துக்கொண்டிருந்த அவர், "அம்மா, இதோ பார்; உன் நச்சு மகா நச்சாய்ப் போச்சு; என்னால் பொறுக்கவே முடியவில்லை. சம்சார சாகரத்தில் நான் விழவேணும் என்கிறதுதானே உன் ஆசை? சரி, விழுகிறேன்; உனக்குத் திருப்தியாகட்டும். இன்று முதல் அவள் எனக்குப் பெண்டாட்டி. சரி தானே?" என்று கோபித்துக்கொள்பவர்போலச் சொல்லிவிட்டு, அன்று முதல் பார்வதியை ஏற்றுக்கொண்டுவிட்டாராம்!

ராஜம்:- "தேவலையே மாப்பிள்ளை! போறது: எப்படியோ மனசறிந்து குணமறிந்து ஒத்துப்போன தம்பதிகள், நேசமாயிருக்கிறார்கள் இப்போது; அதுதானே வேணும்?

"ஆமாம்மா; சந்தோஷமாய் இருக்கிறார்கள். கஷ்டப்பட்டதெல்லாம் மறந்து போச்சு. ஒரு நாள் நான் பார்வதியை அப்புறம் கேட்டேன்; "முன்பே நான் சொன்னபோதே உண்மையைச் சொல்லியிருந்தால் அப்போதே உன்னை ஏற்றிருப்பாரே" என்றேன்.

"அதுவும் சொல்ல முடியாது அக்கா. அப்போது ஒரே பிடிவாதம் மூக்கத்தனம் எல்லாம் இருந்தன. நம்மேல் துவேஷந்தான் அப்போது. சொல்லியிருந்தால் மனத்தில் நல்லதாகவே தோன்றியிராது. அப்புறமாக நான் புக்கத்தில் இருந்தபொழுது தெரிந்ததனால்தான் அது நல்லதாகப் போச்சு. ஏனென்றால் அதற்குள்ளாகவே அவர் மனசு என் விஷயத்தில் கொஞ்சம் இளகி இருந்ததோல்லியோ? நான் புக்ககத்திற்குப் போனதற்குக் காரணம் அவருக்கு நம்மேல் துவேஷம் இல்லாமல் ஓர் அசட்டுப் பிடிவாதம் மாத்திரம் இருந்ததுதானே? அப்புறம் உண்மை தெரிந்ததும் நம்மேல் கோபம் வரவில்லை, மறைத்தோம் என்று. நாம் முதலில் கூறாததுதான் நல்லது. நான் அதை உணர்ந்து தானே முதலில் சொல்ல வேண்டாம் என்றவள், அப்புறம் டயரி மூலம் வெளிப்படுத்தினேன்?" என்றாள்.

** ** **